# எதிர்காலம்

இதழ் 6 ஜூன் 1998


# இடம் பெயர்ந்த மக்களுக்கான உணவு நிவாரணத்தில் வெட்டு

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரைகாலமும் வழங்கப்பட்டுவந்த உணவு நிவரணம் யூலை மாதத்தில் இருந்து குறைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியே இதற்கு காரணம் என்று தெரியவந்துள்ளது .

இதனடிப்படையில் யாழ் மாவட்டத்திற்கான நிவாரணம் 40 வீதத்தாலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 20 வீதத்தாலும் வவுனியா மன்னார் மாவட்டங்களுக்கான நிவாரணம் 15 சத வீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மீளகுடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த உணவு நிவாரணமும் குறைக்கப் படவுள்ளதுடன் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திலுள்ள உறவினர் வீட்டிலோ அதே மாவட்டத்திலுள்ள உறவினர் வீட்டிலோ தங்கியிருக்கும் மக்களுக்கான நிவாரணமும் குறைக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் யாழ் மாவட்டத்தில் 81224 குடும்பங்கள் நிவாரணம் பெற்று வந்தன. அவர்களில் 55566 குடும்பத்தினரே இனி நிவாரணம் பெறமுடியும்.கிளிநொச்சி மாவட்டத்தில் 18857 குடும்பங்களில் 8889 குடும்பத்தினரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 32869 குடும்பத்தினரில் 13333 குடும்பத்தினரும், மன்னாரில் 17169 குடும்பங்களில் 4444 குடும்பத்தினரும் வவுனியாமாவட்டத்தில் 8559 குடும்பத்தி னரில் 5566 குடும்பத்தினருக்குமே நிவாரணம் வழங்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இது வரை அரசால் வழங்கப்பட்டுவந்த நிவாரணமே போது மானதாக இல்லாத போது அந்த வீதத்திலிருந்து மேலும் நிவாரணத்தைக் குறைப்பது, எவ்வாறு மக்களை இனம் கண்டுவழங்கமுடியுமென அரச அதிபர்கள் சிலர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

**ஆசிரியர் கருத்து**

## நம்பிக்கைக்கீற்றும் மழைக் காலமும்

சர்வதேசமெங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்த துயர்துடைப்பு நாட்கள் நம்பிக்கை கீற்று ஒன்றினை வழங்கி வருகிறது. தாயகத்தில் அல்லலுறும் உறவுகளை புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தங்களின் மனமுவந்த பங்களிப்பினை பகிந்து வருவது ஒரு உத்வேகத்தையும் எமக்கு கொடுத்துள்ளது. ஆனால் துயர் துடைப்பு காலம் என்பது இன்றோ நாளையோ முடிந்துவிடக்கூடிய குறுகிய திட்டமல்ல என்பதையும் நாம் இவ் வேளையில் சுட்டிக்காட்ட முற்படுகின்றோம். முடியாத தொடராக இடப்பெயர்வுகளும், மரநிழல் வாழ்வும், நோயும், பிணியும், பசியும் பட்டினியும் எம் உறவுகளை அங்கே துரத்திக் கொண்டிருக்கும் போது எவ்வாறு நாம் ஓய்ந்துவிட முடியும் "பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது" போல வாந்திபேதி எனும் ஆட்கொல்லி எமது மக்களை புதிதாக வாட்டி வருகிறது. எமது மக்களின் இத்தகைய துயருக்கிடையில் பருவகால மாற்றமான மழைக்காலம் பெரிய பூதமாக புறப்பட ஆயத்தமாகி வருகிறது. ஆனாலும் இம் மழைக்கால இடரினை சமாளிக்க புனர்வாழ்வுக் கழகம் தமது வேலைத் திட்டத்தினை தாயகத்தில் ஆரம்பித்துள்ளது. இவ்வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்புவழங்க வேண்டியது புலம் பெயர்ந்த உறவுகளின் தார்மீகக் கடமையாகும்.

"எல்லோரும் பகிர்வோம் உறவுகளை காப்போம்"

## மருந்துகளின் தட்டுப்பாடு தோற்றுவிக்கும் அவலங்கள்

*–அரச அதிபர் வெளிப்படுத்தினார்–*

வன்னியில் நடைபெற்று வரும் போர் நடவடிக்கையை முன்னிட்டு வன்னி பெருநிலப்பரப்பிற்கான மருந்து விநியோகத்தினை அரசின் சுகாதார அமைச்சு நிறுத்தியுள்ள தனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் நெருக்கடிகள் தோன்றியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கான சிறிலங் காவின் அரச அதிபர் திரு ஆர் தர்மகுலசிங்கம் வெளிப்படு த்தியுள்ளார்.

மருந்துகள் உட்பட 125 மிகவும் அத்தியாவசியான மருந்துப் பொருட்கள் மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப் படாமையால் பல நோயாளர்கள் மரணமடைந்து வரும் அபாயநிலை எழுந்துள்ளதனால் முல்லை மாவட்டத் திலிருந்து அவசரசிகிச்சைகளுக்காக வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பப்படும் நோயாளிகள் கூட பலத்த சிரமங்களை எதிர் நோக்கிவருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ள அரச அதிபர் வருடத்தின் இரண்டாவது காற்பகுதிக்கான மருந்துகள் இங்கு கொண்டுவருவதற்கான ஒழுங்குகளை ஐ.நா அகதிகள் ஸ்தானிகராலயம் விரைவில் மேற்கொள்வது அவசியம் எனவும் எடுத்துக்காட்டி யுள்ளார்.

1990 ஆம் ஆண்டிலிருந்து முல்லைமாவட்ட வைத்திய சாலையில் மருத்துவ ஆய்வு கூடம் இயங்காமையால் எழுந்த பெரும் சிக்கலையும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

எதிர்காலம்

# துயர்துடைப்புத் திட்டமும் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டமும்

1997ம் ஆண்டு இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். குறிப்பாக சூரியக்கதிர், சத்ஜெய இராணுவ நடவடிக்கைகளால் இலங்கையின் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெரும் தொகையான மக்கள் தமது வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அடிப்படை அத்தியாவசிய வசதிகளற்று வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழந்து கொண்டிருந்த போது இலங்கையின் வரலாறு காணாத மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை சிறிலங்கா அரசால் ஜெயசிக்குறு எனப் பெயரிடப்பட்டு வவுனியாவில் இருந்து 1997 வைகாசித் திங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் விளைவாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் மரநிழல்களிலும், பொது இடங்களிலும் வாழும் சூழ்நிலை உருவாகியது. இவ் இடம் பெயர்ந்த மக்களுக்கு சிறிலங்கா அரசால் வழங்கப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இதே போன்று அரசால் வன்னி பெருநிலப்பரப்பின் நான்கு மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களின் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் நிவாரணம் வழங்கப்பட்ட 04,21,462 பேரில் 2,36,462 அங்கத்தவர்களுக்கு 1997ல் வழங்கப்பட்டு வந்த உணவு நிவாரணத்தை சிறிலங்கா அரசு நிறுத்திக் கொண்டது.

இதே போன்று பாதிக்கப்படும் மக்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய வறுமை நிவாரணம், வரட்சி நிவாரணம் வெள்ள நிவாரணம், கடல்வலயத் தடைச்சட்டதால் பாதிக்கப்பட்டு தொழில் இழந்தவருக் கான நிவாரணம் என எவ்வித நிவாரணமும் இந்த நான்கு மாவட்டங்களிலும் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் சிறிலங்கா அரசால் 1997ல் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் பொருளாதாரத்தடைகளும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும் மக்களின் அத்தியாவசிய அடிப்படைவசதிகளற்ற வாழ்வு நிலைகளும், தொழில் இழந்ததினால் ஏற்பட்ட வாழ்வியக்கப் பாதிப்புகளும் உடமை, உயிர் இழப்புகளும்மக்களின் வறுமை நிலையை அதிகரித்து மக்களுக்கு பெரும்துன்ப துயரத்தை உண்டு பண்ணியது.

இந்தநிலையானது மக்களின் சமூகவாழ்விலும் கல்வி சுகாதாரம்போன்ற சமூக அபிவிருத்தியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து பிச்சை எடுத்துத் திரியும் வீதிச்சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்து பசி, பட்டினி மக்கள் மத்தியில் அதிகரித்து சென்றது.

இந்த சூழ்நிலையில்தான் மக்களின் துன்ப துயரங்களையும் அவலங்களையும் ஓரளேவனும் நிவர்த்திக்கும் வகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் "துயர் துடைப்புத் திட்டம்" என்ற திட்டத்தை 1997 ஆரம்பித்து வைத்தது.

## புலம்பெயர்நாடுகளில் துயர்துடைப்பு நாட்கள் -1998

### யேர்மனி

உதவிக்கரங்களை நீட்டுங்கள் என்னும் தலைப்பில் பரப்புரைப்பிரசுரம் தயாரிக்கப்பட்டு துயர்துடைப்பு திட்டம் யேர்மனியின் அனைத்துப்பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் செயற் திட்டத்தில் உலகத்தமிழர் இயக்கத் தமிழாலய ங்களின் நிர்வாகிகள் ஆசிரியர்கள் கலைபண்பாட்டுக் கழகஉறுப்பினர்கள் புனர்வாழ்வுக்கழகஉறுப்பினர்கள் ஆகியோரை இணைத்து, குழுக்களாக அமைத்து யேர்மனி தழுவிய துயர்துடைப்பு திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதே வேளை எசன் வள்ளிதேவ சேனா சிறி சிவசுப்பிரமணியம் ஆலயநிர்வாகத்தினர் ஆலயநிதி யிலிருந்து தமிழீழத்தில் அல்லலுறும் மக்களின் துயர்துடைப்பிற்காக ஆயிரம் மார்க் பணத்தை வழங்கினர். எசன் நகரில் ஈழமுரசு நடாத்திய நாடகப் போட்டியின் போது இப்பணம் ஆலயநிர்வாகத்தினரால் கையளிக்கப்பட்டது.

### பிரான்ஸ்

துயர்துடைப்பின் ஆரம்பநாள் எழுச்சி விழாவுடன் ஆரம்பமானது. அவ் விழாவில் கலந்துகொண்ட மக்கள் தமது நிதிப்பங்களிப்பினை அரங்கிற்கு வந்து வழங்கினர். இவ் விழாவின்போது வட்டுக்கோட் டையைச் சோர்ந்த ஒருவா் தனது மகனது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த முழு நிதி யையும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

எமது உறவுகளின் துயர்துடைப்போம் என்ற பிரசுரத்துடன் எமது மக்கள் படும் அவலத்தை வெளிப்படுத்தி தமிழ் மக்கள் வாழும்பகுதிகளில் இச்செயற்திட்டம் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்களாக ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள தமிழர் அமைப்புக்களைச்சேர்ந்த உறுப்பினர்கள் மிகவும் வேகத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

### இத்தாலி

1997ம் ஆண்டைப்போன்று இவ்வருடமும் ஒரு மாதகாலம் செயற்படுத்தப்படுகின்றது. இச்செயற் திட்டத்தில் இத்தாலிவாழ் தேசத்திற்கான செயற்பாட் டாளர்களும் ஈழத்தமிழர் விளையாட்டு சம்மேளன த்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதன் கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் இவ் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்ற ஆண்டு துயர்துடைப்பு நாட்களின் போது இவ்விடம் வாழும் 80 வீதமான எமது மக்கள் பங்களிப்பை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் உடல் நலம் பேணும்

## —சுகாதார மேம்பாட்டுத் தொண்டர் திட்டம்—

இன்றைய காலம் இலங்கையின் வன்னிப்பகுதியைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வன்னிப்பகுதியின் மாவட்டங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் தொடரும் யுத்தசூழ்நிலையும், தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும், அடிப்படை அத்தியாவசிய சுகாதார மருத்துவ வசதிகளும், பொருட்களுக்கான பற்றாக்குறை களும், அரசின் தடைகளும், நிவாரண நடவடிக்கைகள் நிறுத்தமும், தமிழ் மக்களுடைய சுகாதாரரீதியான பாதிப்புகள் அதிகரிப்புக்குக் காரணமாகிவிட்டன.

நோய்த்தாக்கங்களும் ஊட்டச் சத்தின்மையும், இறப்புவீதமும் அதிகரித்து சமூகத்தின் வாழ்வு நிலையிலும், வாழ்வு இயக்கத்திலும் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

இந்நிலையைக் கருத்திற்கொண்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுகாதாரச் செயற்பாட்டின் வருமுன்காக்கும் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து கிராமமட்டத்தில் சுகாதார சேவையை வழங்கி சுகாதார மேம்பாட்டை உருவாக்கும் சுகாதாரத் தொண்டர்களை 1997ல் உருவாக்கி "சுகாதார மேம்பாட்டுத் தொண்டர் திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தவகையில் 04 மாவட்டங்களிலும் 200ற்கு மேற்பட்ட தொண்டர்களை உருவாக்கி அவர்களுக்கான பயிற்சிகள் சீருடைகள் ஏனைய உதவிகள் வழங்கி சுகாதாரத் திணைக்களத்தின் பணியாளர்கள் சேவையாளர்களுடன் இணைந்து இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தி வருகிறது.

| மாவட்டம் | சுகாதாரத் தொண்டர் எண்ணிக்கை |
|---|---|
| 01 கிளிநொச்சி | 105 |
| 02 முல்லைத்தீவு | 060 |
| 03 வவுனியா | 060 |
| 04 மன்னார் | 032 |

# திருமலையில் சிங்கள குடியேற்றங்கள் தமிழர் அகதிகளாவது அதிகரிக்கிறது

திருமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழ் மக்களது பாரம்பரிய வதிவிடங்களை பெரிதும் சிதைத்து அவர்களை அகதிகளாக்கி வரும் குடியேற்றங்கள் திருமலை மாவட்டத்தில் தற்போது மிகவும் தீவிரப் படுத்தப்பட்டு ள்ளது. திருமலை,கண்டி வீதி, வைரவரூற்று, கப்பற்துறை ஆகிய பிரதேசங்களில் திருமலை அரச அதிபரின் மேற்பார்வையில் புதிய சிங்கள குடியேற்றங்கள் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றது குடியேற்றவாசிகளுக்கான பல உதவிகளையும் மனோதிடத்தினையும், பாதுகாப்பினையும் இராணுவத்தினர் வழங்கி வருகின்றனர். இக் குடியேற்றத் திட்டங்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் அகதி முகாம்களை நாடிச் சென்றுள்ளனர். இவர்களின் அவலங்கள் வெளியுலகிற்குத் தெரியாது பெரும்பாலும் மறைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியொன்று செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் நடாத்தப்பட்டுள்ளது. ஸ்கந்தபுரம் முருகன் கோவில் வளாகத்தில் நடாத்தப்பட்ட இவ் விளையாட்டுப் போட்டிக்கு செஞ்சிலுவைச் சங்க இயக்குனர் திரு. சிவகுருநாதன் தலைமை வகித்தார்.

## புதுக்குடியிருப்பில் புதிய ஆரம்பப் பாடசாலை

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பு பகுதியில் தங்கியிருப் பவர்களில் உள்ள சிறியவர்களின் கல்வித் தேவையை ஈடு செய்யும் முகமாக ஆரம்பப் பாடசாலை ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

நேசன் குடியேற்றத் திட்டப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்ட இப் பாடசாலையில் பல சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள னர். இப் பாடசாலையானது சமூக அபிவிருத்திச் சங்கத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

# கல்விச் சேவை நிலையம்


இன்றைய காலமும் தொடரும் யுத்த சூழ்நிலையும், தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும் மாணவர்களின் கல்வியிலும், சமூகத்தின் கல்வி அபிவிருத்தியிலும் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

கல்வி ரீதியான அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்பானது சமூகத்தின் அபிவிருத்தியில் தாக்கத்தை உண்டுபண்ணி நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கருத்திற்கொணடு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 'கல்விச் சேவை நிலையம்' என்ற கட்டமைப்பை உருவாக்கி செயற்படுத்தி வருவது தெரிந்ததே.

இந்த வகையில் இந்நிலையமானது, கல்வி அபிவிருத்தியின் மூலம் சமூக அபிவிருத்தி, மனிதவள மேம்பாடு, சமூகசேவைச் சமுதாயம் உருவாக்கல் என்ற மூன்று இலக்கைவைத்து செயற்படுத்தி வருகிறது.

1997ம் ஆண்டு மட்டும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கல்விச் சேவை நிலையம், கல்விவளர்ச்சி நிலையம் எனப் பல நிலையங்களை உருவாக்கி சேவையாற்றி வருகிறது.

இவ்வகையில் மல்லாவிபகுதியில் கடந்த வருடம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மூன்று மாதங்களும் இக் கல்விசேவை மூலம் எழுத்தறிவூட்டல் பயிற்சி வழங்கப்பட்டு எவ்வாறு பயன்பெறவைக்கப்பட்டனர் என்பதை கீழ்காணும் மதிப்பீட்டு வரைபு மூலம் தெரியப்படுத்துகின்றோம்.



# வாந்திபேதி ஒழிப்பு போர்
## கழகமும் முழு மூச்சுடன் இணைவு

வட பகுதிகளான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் தீவிரமாக பரவிவந்த ஆட்கொல்லி வாந்தி பேதி நோயினை ஒழிப்பதற்கு தமிழீழ சுகாதார சேவை மற்றும் ஏனைய தொண்டர் அமைப்புக்களுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தன்னை முழு மூச்சாக இணைத்துக் கொண்டுள்ளது.

இதுவரை கிடைத்த செய்திகளின்படி வாந்தி பேதிக்கு மன்னார், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் நால்வர் பலியாகியதுடன் மேலும் நூற்றுக் கணக்கானவர்களுக்கு நோய் தொற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வாந்திபேதி நோயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் போராட்டத்தில் புனர்வாழ்வுக்கழக தொண்டர்கள் முழு மூச்சாக இயங்கி வருகின்றனர். பொதுமக்களுக்கு நோய்பற்றிய விழிப்பூட்டல் தடுப்பு நடவடிக்கைகள், பொதுசுகாதார நடவடிக்கைகள் ஆகியவற்றில் கிராமம் கிராமமாக தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தமிழர் பகுதிகளில் வாந்தி பேதி நோய் ஒழிப்பு விடயத்தில் சிறிலங்கா அரசு அக்கறையீனம் காட்டிவருவது குறிப்பிடத்தக்கது.



காலை இழந்த பெண்பிள்ளைக்கு வெண்புறா நிறுவனத்தைச் சேர்ந்தவரால் செயற்கைக்கால் பொருத்தப்படுகின்றது. எம்.எஸ்.எவ்.பிரதிநிதி அதை பார்வையிடுகின்றார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருகிறது. மாவட்டத்தில் *1470* ஆசிரியர்களுக்கான தேவை இருந்து வருகின்ற போதிலும் தற்போது *700* ஆசிரியர்களே அங்கு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த குறைபாடுபற்றி வடக்கு கிழக்கு மாகாணசபை கல்வித்துறைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை ஏது நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## விவசாயக் கடனுதவி

மல்லாவி பிள்ளையார் கடனுதவி சங்கத்தின் *30* உறுப்பினர்களுக்கு விவசாய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. ஐ.நா அகதிகள் ஸ்தானிகராலயம், "கெயார்" தொண்டு நிறுவனத்தின் அனுசரனையுடன் வழங்கப்பட்ட இக் கடனுதவியின் மொத்தத் தொகை *3* இலட்சத்து *29* ஆயிரம் ரூபாய்களாகும்.

இக்கடனுதவிமூலம் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை இவ்விவசாயிகள் விஸ்தரிக்கவுள்ளனர்.

## தடைகள் மத்தியிலும் சிறந்த பண்பு

இன்றைய நிலையில் எமக்குத் தேவையான குடியிருப்புப் பொருட்களையோ மருந்து வகைகளையோ போசாக்கு உணவுகளையோ வேறு பொருட்களையோ வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் பெற்றுதந்தாலும்கூட அது பூரணமாக இருக்காது. மலேரியா மருந்துவகைகள், மலகூடங்களை அமைப்பதற்கான சீமேந்து என்பவற்றைக் கூட அரசு வேண்டுமென்றே தடை செய்துள்ளது. முக்கியமாக உணவுவகைகளைக்கூட போதியளவு அனுப்பவில்லை.

இவ்வாறான நிலமையில் மக்களுடைய அத்தியாவசிய தேவைகள் பலவற்றை ஓரளவாவது ஈடுசெய்து வரும் அதே வேளை எக்காரணம் கொண்டும் எமது குழந்தைகளை போஷாக்கின்றி சாகவிடமாட்டோம் என்பது போன்ற சிறந்த பண்புகளைக் கொண்டு தமிழர் புனர்வாழவுக் கழகம் செயலாற்றிவருகிறது.

திரு.கே. எஸ். சிவகுரு
பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்
இலங்கை

## துரித புனர்வாழ்வு அபிவிருத்திச்சேவைத் திட்டம் பற்றி மனதிலிருந்து மலர்ந்தவை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திவருகின்ற கல்விச்சேவை நிலையம் வறியமாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகின்றது இச் சேவைநிலையம் மேலும் பன்முகப் படுத்தப் பட்டு வறிய மாணவர்களுக்கு கல்விச் சேவையை மேலும் வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கின் றேன்.

திரு. அ. கனகரத்தினம்,
அதிபர்
கிளிநொச்சி.பாரதி வித்தியாலயம்


தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

அனைத்துலக இணைப்பகம்
P.O. Box 4254, Knox city, VIC 3152, Australia.
Tel: 61 39 88 8 899

★

'எதிர்காலம்' தொடர்புகட்கு:
O.R.T - France
26 Rue du Departement
75018 Paris, France
Tel / Fax - 01 40 38 30 74

## தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைகள்

E. Anantharajah
Hompech str. 16
41189 Monchengladbach,
Germany.
Tel - 021 66 58 508

★

861, Brodview Ave
Toronto - Ontario,
M4K 2P9, Canada.
Tel - 416 / 466 - 9624
Fax - 416 / 406 - 4755

★

P.O. Box 14701
Parmure
Aukland - 05
New Zealand.

★

P.O. Box 49
125 21 Alvsjo
Sweden.

Tal Str. 15,
6020 Emmenbrucke,
Switzerland.
Tel / Fax - 041 260 83 98

★

K. Chinnaththurai,
Schiermonnikoog Str. 44,
1825 NB
Alkmaar, Netherland.

★

P.O. Box 4742
Sofienberg
0506 Oslo, Norway.
Tel / Fax - 22-717537

★

Via Dante
218/A
90141 Palermo, Italy.
Tel: 91 68 24 056

79, Hoe Street,
Walthamstow,
London E17 4SA,
U.K.
Tel- 0181-520 5876
Fax- 0171-403 16 53

★

517 Old Town Road,
Cumberland,
MD 21502,
U.S.A.
Tel: 1 301 59 53 705

★

G. Ananthan
Brorsons VJE-51, 2-TV
7400 Herning, Denmark.
Tel - 97 - 21 46 88
Fax - 97 - 21 76 49

★